ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 2071/13 - 2018 මැයි 15 වැනි අඟහරුවාදා - 2018.05.15
*2071/13 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**போறணைத் தொழிலுக்கான சம்பளச் சபை**

போறணைத் தொழிலுக்கான சம்பளச் சபையானது, சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் வாயிலாகத் தனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் தீர்மானங்களை அவ்வட்டவணையிற் கூறப்பட்டுள்ளவாறு மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளதென மேற்கூறிய கட்டளைச்சட்டத்தின் (136- ஆம் அத்தியாயம்) 28 ஆம் பிரிவின்கீழ் இத்தால் அறிவிக்கின்றது.

உத்தேச தீர்மானங்களுக்கான ஆட்சேபனைகள் சபைத் தலைவர் 2018ஆம் ஆண்டு யூன் மாதம் 05 - ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின்மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஏ. விமலவீர,
தலைவர்,
போறணைத் தொழிலுக்கான சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு,
2018, மே 14.

G27624 - 17 (2018/05)
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

போறணைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1958 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் தேதிய 11605 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவாறானவையும், 2013 ஆம் ஆண்டு மாச்சு 27ஆந் திகதிய 1803/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் மூலம் கடைசியாக, வேறுபடுத்தப்பட்டுள்ளவாறான முடிபுகள், கீழே காட்டப்பட்டுள்ளவாறு அட்டவணையின் பாகம் 11க்குப் பதிலாகப் பின்வரும் புதிய பாகத்தினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படல் வேண்டும்.

II ஆம் பாகம்

மாதமொன்றுக்குக் கொடுபட வேண்டிய ஆகக்குறைந்த சம்பள விகிதங்கள்

| ஊழிய ஆண்டு | "ஏ" வகுப்பு<br>ரூ. ச. | "பீ" வகுப்பு<br>ரூ. ச. | "சீ" வகுப்பு<br>ரூ. ச. |
|---|---|---|---|
| 1 - ஆம் ஆண்டு | 12,180.00 | 11,125.00 | 10,070.00 |
| 2 - ஆம் ஆண்டு | 12,330.00 | 11,250.00 | 10,170.00 |
| 3 - ஆம் ஆண்டு | 12,480.00 | 11,375.00 | 10,270.00 |
| 4 - ஆம் ஆண்டு | 12,630.00 | 11,500.00 | 10,370.00 |
| 5 - ஆம் ஆண்டு | 12,780.00 | 11,625.00 | 10,470.00 |
| 6 - ஆம் ஆண்டு | 12,930.00 | 11,750.00 | 10,570.00 |
| 7 - ஆம் ஆண்டு | 13,080.00 | 11,875.00 | 10,670.00 |
| 8 - ஆம் ஆண்டு | 13,230.00 | 12,000.00 | 10,770.00 |
| 9 - ஆம் ஆண்டு | 13,380.00 | 12,125.00 | 10,870.00 |
| 10 - ஆம் ஆண்டு | 13,530.00 | 12,250.00 | 10,970.00 |
| 11 - ஆம் ஆண்டு | 13,680.00 | 12,375.00 | 11,070.00 |

06 - 49/1

---

**சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம்**

அறிவித்தல்

**சுத்திகரிப்புச் சேவைத் தொழில்**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க சுத்திகரிப்புத் தொழிலுக்கான சம்பளச் சபையானது மேறகூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்களிக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் தரப்பட்டுள்ள முறையில் அவ்வட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறான சபையின் அத்தகைய தீர்மானங்கள் மாற்றுவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கின்றது.

மேற் கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 05 ஆம் நாளன்று நண்பகல் 12.00 மணி வரை சபையின் தலைவர் பெற்றுக் கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஏ. விமலவீர,
தலைவர்,
சுத்திகரிப்புச்சேவைத்
தொழிலுக்கான சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு,
2018, மே 14.

**அட்டவணை**

சுத்திகரிப்புச் சேவைத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பளங்கள் தொடர்பாக தொழில் ஆணையாளரால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு ஏற்ப ஆக்கப்பட்டனவும், 1993ஆம் ஆண்டு யூலை மாதம் 07ஆந் திகதிய 774/5ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளனவும் காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்படுவனவும், 2013 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதிய 1812/30ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் அறிவிப்பின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டனவுமான தீர்மானங்கள் அவ்வட்டவணையில் பின்வரும் பகுதியினை பிரதியீடு செய்வதன் மூலம் வேறுபடுத்தப்படுதல் வேண்டும். II ஆம் பகுதியில் குறித்துரைக்கப்பட்டுள்ளவர்களும், சுத்திகரிப்புச் சேவைத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்குமான நேர வேலை தொடர்பாக கொடுத்தற்பாலதான ஆகக்குறைந்த சம்பள வீதம் I ஆம் நிரலுக்கெதிராக II ஆம் நிரலிற் கூறப்பட்டுள்ளவாறு இருத்தல் வேண்டும்.

பகுதி - II

| நிரல் I | நிரல் II<br>சாதாரண வேலை நாள் ஒன்றிற்கான சம்பள வீதம்<br>ரூ. ச. |
|---|---|
| (அ) இயக்கும் ஆளணி -<br>சுத்தப்படுத்துவோர், மலசலகூடத் தொழிலாளர், சுத்திகரிப்போர் அல்லது எப்பெயர் கொண்டு அழைப்பினும் அலுவலகங்களையும் நிறுவனங்களையும் சுத்தப்படுத்தும் செயலில் ஈடுபடுவோர். | 600.00 |
| (ஆ) மேற்பார்வை ஆளணி -<br>இயக்கும் ஆளணிக்குப் பொறுப்பாகவுள்ள ஊழியர்கள், பொறுப்பதிகாரிகள், மாற்றுக் கடமை மேற்பார்வையாளர்கள் அல்லது மேற்பார்வையாளர்கள். | 700.00 |

06 - 49/2

---

**சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம்**

அறிவித்தல்

**மோட்டார் போக்குவரத்துத் தொழில்**

மோட்டார்ப் போக்குவரத்துத் தொழிலுக்கான சம்பளச் சபையானது, சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30ஆம் பிரிவின் வாயிலாகத் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் முடிபுகளை அவ்வட்டவணையிற் கூறப்பட்டுள்ளவாறு மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளதென, மேற்கூறிய கட்டளைச்சட்டத்தின் (136ஆம் அத்தியாயம்) 28 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 05 ஆம் நாளன்று நண்பகல் 12.00 மணிவரைக்கும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின்மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஏ. விமலவீர,
தலைவர்,
மோட்டார் போக்குவரத்துத்
தொழிலுக்கான சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 05,
2018, மே 14.

**அட்டவணை**

மோட்டார் போக்குவரத்துத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டும் 1947 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதிய 9667 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரமாகிய அறிவித்தலின் அட்டவணையினகத்தே கூறப்பட்டுள்ளனவும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டனவும், 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆந் திகதிய 1800/27ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டனவுமான முடிபுகள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்தின் 6 ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்:

பகுதி II

**தொழிலாளர் வகுப்பு**

**'ஏ' வகுப்புத் தொழிலாளர்:**

22 பிரயாணிகளுக்கு மேல் ஏற்றுவதற்கு உத்தரவு பெற்ற பேரூந்துச் சாரதிகள்.

**'பீ' வகுப்புத் தொழிலாளர்:**

22 பிரயாணிகளையும் அதற்குக் குறைந்த தொகைப் பிரயாணிகளையும் ஏற்றுவதற்கு உத்தரவு பெற்ற பேரூந்து சாரதிகள், நோயாளர் மோட்டார் வண்டிச் சாரதிகளும், லொறிச் சாரதிகளும், (பெருந்தோட்டம் ஒன்றிற்கு சொந்தமானதாய் அத் தோட்டத்தினுள் மட்டும் போக்குவரத்துப் பயன்படுத்தப்படுபவை தவிர) 20 அந்தருக்கு மேற்பட்ட பாரம் ஏற்றும் உத்தரவு பெற்ற லொறிச் சாரதிகளும், வான் சாரதிகளும்.

**'சீ' வகுப்புத் தொழிலாளர்:**

வாடகைக் கார்கள், கெப்கார்களின் சாரதிகள் 20 அந்தருக்குக் குறைந்த பாரம் ஏற்ற உத்தரவு பெற்ற லொறி, வான் சாரதிகள் (பெருந்தோட்டம் ஒன்றிற்குச் சொந்தமானதாய் அத்தோட்டத்தினுள் போக்குவரத்திற்கு பயன்படுத்தப்படும் லொறிகள் தவிர) வான் சாரதிகள், முச்சக்கர வண்டிச் சாரதிகள் மற்றும் பிரேதமேற்றும் மோட்டார் வண்டிச் சாரதிகள்.

**'டீ' வகுப்புத் தொழிலாளர்:**

பொருட்கள் கொண்டு செல்வதற்கான இழுவை வண்டிகள் கொண்ட இழுபொறிச் சாரதிகள், இழுவை வண்டிகள் கொண்ட லொறிச் சாரதிகள் (சிகாமல் குதிரை வண்டி வகை இழுவை வண்டிகள் கொண்ட லொறிகள் தவிர அல்லது தோட்டத்தினுள் மட்டும் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படும் இழுபொறிச் சாரதிகள்)

**'ஈ' வகுப்புத் தொழிலாளர்:**

பெருந்தோட்டங்களுக்குச் சொந்தமானதும் தோட்டத்தினுள் மட்டும் பாவிக்கப்படுவதுமான பின்வரும் வாகனங்களின் சாரதிகள், (அ) லொறிகள், (ஆ) இழுவை வண்டிகள் கொண்ட இழுபொறிச் சாரதிகள்.

**'எப்' வகுப்புத் தொழிலாளர்:**

நடத்துநர்கள், எழுதுவினைஞர்கள், காசாளர்கள்,சீட்டு எழுதுநர்கள், ஆசனப் பதிவு எழுதுவினைஞர்கள் முதலான பேரூந்து வண்டியிற் பணியாற்றுவோர்.

**'ஜீ' வகுப்புத் தொழிலாளர்:**

20 அந்தருக்கு மேற்பட்ட பாரமேற்ற உத்தரவு பெற்ற லொறிகளின் துப்பரவாக்குநரும் சுமையாட்களும்.

**'எச்' வகுப்புத் தொழிலாளர்:**

20 அந்தருக்கும் அதற்குக் குறையவும் பாரமேற்ற உத்தரவுபெற்ற லொறிகளின் துப்புரவாக்குநரும் சுமையாட்களும், பேரூந்துகள், வாடகை வண்டிகள், கெப்கார்கள், வான்கள், நோயாளர் வண்டிகள், பிரேதமேற்றும் மோட்டார் வண்டிகள்.

**'ஐ' வகுப்புத் தொழிலாளர்:**

பேரூந்து பரிசோதகர்களும், நேரம் பதியுநரும்.

**'ஜே' வகுப்புத் தொழிலாளர்:**

பேரூந்து பரிசோதகர்களும், பஸ் நிலையக் கண்காணிப்பாளரும்.

**'கே' வகுப்புத் தொழிலாளர்:**

மோட்டார் போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்ட, மேலே கூறப்பட்டோர் தவிர்ந்த ஏனைய எல்லாத் தொழிலாளர்களும்.

முன் காட்டப்பட்ட முடிபுகள் :

(அ) “சுத்திகரிப்போர்” எனப்படுவோர் (எழுதுவினைஞர் வகையை சாராது) லொறிகள், பேரூந்துகள், வாடகைக் கார்கள்,கெப் கார்கள், வான்கள், நோயாளர் வண்டிகள் அல்லது பிரேதமேற்றும் மோட்டார் வண்டிகள்.

(ஆ) “சுமையாட்கள்” எனப்படுவோர் வேலைக்காக வாகனங்களிலே பிரயாணஞ் செய்ய வேண்டியவர்களான லொறிகள், பேரூந்துகள், வான்கள், வாடகைக் கார்கள், கெப் கார்கள், நோயாளர் வண்டிகள் பிரேதமேற்றும் மோட்டார் வண்டிகள் ஆகியவற்றில் சுமைகள் ஏற்றி இறக்குவோர்.

பகுதி II

**ஆகக்குறைந்த மாதச் சம்பள வீதம்**

| ஊழிய ஆண்டு | வகுப்பு ஏ, டீ<br>ரூ. ச. | வகுப்பு பீ<br>ரூ. ச. | வகுப்பு சீ<br>ரூ. ச. | வகுப்பு ஈ, எப், ஜே<br>ரூ. ச. | வகுப்பு ஜீ, ஐ<br>ரூ. ச. | வகுப்பு எச்<br>ரூ. ச. | வகுப்பு கே<br>ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|---|
| 01-ஆம் ஆண்டு | 12,025.00 | 11,650.00 | 11,240.00 | 10,940.00 | 10,600.00 | 10,340.00 | 10,000.00 |
| 02-ஆம் ஆண்டு | 12,225.00 | 11,825.00 | 11,390.00 | 11,065.00 | 10,700.00 | 10,440.00 | 10,100.00 |
| 03-ஆம் ஆண்டு | 12,425.00 | 12,000.00 | 11,540.00 | 11,190.00 | 10,800.00 | 10,540.00 | 10,200.00 |
| 04-ஆம் ஆண்டு | 12,625.00 | 12.175.00 | 11,690.00 | 11,315.00 | 10,900.00 | 10,640.00 | 10,300.00 |
| 05-ஆம் ஆண்டு | 12,825.00 | 12,350.00 | 11,840.00 | 11,440.00 | 11,000.00 | 10,740.00 | 10,400.00 |
| 06-ஆம் ஆண்டு | 13,025.00 | 12,525.00 | 11,990.00 | 11,565.00 | 11,100.00 | 10,840.00 | 10,500.00 |
| 07-ஆம் ஆண்டு | 13,225.00 | 12,700.00 | 12,140.00 | 11,690.00 | 11,200.00 | 10,940.00 | 10,600.00 |
| 08-ஆம் ஆண்டு | 13,425.00 | 12,875.00 | 12,290.00 | 11,815.00 | 11,300.00 | 11,040.00 | 10,700.00 |
| 09-ஆம் ஆண்டு | 13,625.00 | 13,050.00 | 12,440.00 | 11,940.00 | 11,400.00 | 11,140.00 | 10,800.00 |
| 10-ஆம் ஆண்டு | 13,825.00 | 13,225.00 | 12,590.00 | 12,065.00 | 11,500.00 | 11,240.00 | 10,900.00 |
| 11 -ஆம் ஆண்டு | 14,025.00 | 13,400.00 | 12,740.00 | 12,190.00 | 11,600.00 | 11,340.00 | 11,000.00 |
| 12 -ஆம் ஆண்டு | 14,225.00 | 13,575.00 | 12,890.00 | 12,315.00 | 11,700.00 | 11,440.00 | 11,100.00 |
| 13-ஆம் ஆண்டு | 14,425.00 | 13,750.00 | 13,040.00 | 12,440.00 | 11,800.00 | 11,540.00 | 11,200.00 |
| 14-ஆம் ஆண்டு | 14,625.00 | 13,925.00 | 13,190.00 | 12,565.00 | 11,900.00 | 11,640.00 | 11,300.00 |
| 15-ஆம் ஆண்டு | 14,825.00 | 14,100.00 | 13,340.00 | 12,690.00 | 12,000.00 | 11,740.00 | 11,400.00 |

06 - 49/3

---

**சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம்**

அறிவித்தல்

**பாதுகாப்புச் சேவைத் தொழிலுக்கான சம்பளச் சபை**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க பாதுகாப்புச் சேவைத் தொழிலுக்கான சம்பளச் சபையானது மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30ஆம் பிரிவினால் அதற்களிக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இதற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ள முறையில் அவ்வட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறான சபையின் அத்தகைய முடிபுகளை மாற்றுவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கின்றது.

மேற் கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2018 ஆந் திகதி யூன் மாதம் 05 ஆம் நாளன்று நண்பகல் 12.00 மணி வரை சபையின் தலைவரினால் பெற்றுக் கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஏ. விமலவீர,
தலைவர்,
பாதுகாப்புச் சேவைத் தொழிலுக்கான சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு,
2018, மே 14.

**அட்டவணை**

பாதுகாப்புச் சேவைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்படும் 1978 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 11ஆந் திகதிய 330ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டனவும், கடைசியாக 2012ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18ஆந் திகதிய 1789/19ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலின் மூலம் வேறுபடுத்தப்பட்ட தீர்மானங்களின் பகுதி II ற்குப் பதிலாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பந்தியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

அ. தொழிற்பாட்டு ஆளணியினர் : பாதுகாப்பு அலுவலர், பாதுகாப்பு காவலர்,

காவலாளர்கள், "பெட்ரல்மன்" அல்லது எப்பெயர் கொண்டாயினும் அழைக்கப்படும் ஊழியர்கள்

ஆ. மேற்பார்வை ஆளணியினர் : தொழிற்பாட்டு ஆளணியினருக்குப் பொறுப்பாக, உள்ள ஊழியர்கள், பொறுப்பு அலுவலர்கள், மாற்று நேர மேற்பார்வையாளர்கள் அல்லது மேற்பார்வையாளர்கள்

மாதமொன்றுக்கான ஆகக் குறைந்த சம்பள வீதம்

| ஊழிய ஆண்டு ஆளணியினர் ரூ. ச | தொழிற்பாட்டு ஆளணியினர் .ரூ. ச. | மேற்பார்வை |
|---|---|---|
| 01-ஆம் ஆண்டு | 10,000.00 | 10,620.00 |
| 02-ஆம் ஆண்டு | 10,100.00 | 10,770.00 |
| 03-ஆம் ஆண்டு | 10,200.00 | 10,920.00 |
| 04-ஆம் ஆண்டு | 10,300.00 | 11,070.00 |
| 05-ஆம் ஆண்டு | 10,400.00 | 11,220.00 |
| 06-ஆம் ஆண்டு | 10,500.00 | 11,370.00 |
| 07-ஆம் ஆண்டு | 10,600.00 | 11,520.00 |
| 08-ஆம் ஆண்டு | 10,700.00 | 11,670.00 |
| 09-ஆம் ஆண்டு | 10,800.00 | 11,820.00 |
| 10-ஆம் ஆண்டு | 10,900.00 | 11,970.00 |
| 11 -ஆம் ஆண்டு | 11,000.00 | 12,120.00 |
| 12 -ஆம் ஆண்டு | 11,100.00 | 12,270.00 |
| 13-ஆம் ஆண்டு | 11,200.00 | 12,420.00 |
| 14-ஆம் ஆண்டு | 11,300.00 | 12,570.00 |
| 15-ஆம் ஆண்டு | 11,400.00 | 12,720.00 |
| 16-ஆம் ஆண்டு | 11,500.00 | 12,870.00 |

| | | |
|---|---|---|
| 17-ஆம் ஆண்டு | 11,600.00 | 13,020.00 |
| 18-ஆம் ஆண்டு | 11,700.00 | 13,170.00 |
| 19-ஆம் ஆண்டு | 11,800.00 | 13,320.00 |
| 20-ஆம் ஆண்டு | 11,900.00 | 13,470.00 |
| 21-ஆம் ஆண்டு | 12,000.00 | 13,620.00 |
| 22-ஆம் ஆண்டு | 12,100.00 | 13,770.00 |
| 23-ஆம் ஆண்டு | 12,200.00 | 13,920.00 |
| 24-ஆம் ஆண்டு | 12,300.00 | 14,070.00 |
| 25-ஆம் ஆண்டு | 12,400.00 | 14,220.00 |
| 26-ஆம் ஆண்டு | 12,500.00 | 14,370.00 |

*06 -49/4*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.*